# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**OCTOBER 2024**




**C.S.I. TAMIL CHURCH SHARJAH**
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| செயலர் மடல் | 3 |
| திருமறை தியானம் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| அறிந்து கொள்வோம் | 9 |
| Differentlyabled Dignity and Dependence | 10 |
| இனிய இல்லறம் | 12 |
| Church History | 15 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 18 |
| Kids Corner | 19 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 21 |
| Daily Bible Reading | 23 |
| ஆராதனை தியானப் பொருள் | 24 |



# From the Presbyter·s Desk

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே.

மீட்பரும் இரட்சகருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிதாவாகிய கடவுளாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த காலங்கள் முழுவதும் நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பணிகளிலும், ஊழியங்களிலும், நம்மோடு இருந்து நம்மை வழிநடத்தின ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த மாத ஊழியங்கள் அனைத்திலும் உற்சாகமாய் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகின்ற அக்டோபர் 13-ஆம் தேதி முதற்கனி படைக்கும் நாளை நாம் அனுசரிக்க இருக்கின்றோம். ஆகவே, நீதிமொழிகள் 3:9,10 ன்படி உன் பொருளாலும் உன் எல்லா விலைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சைரசம் புரண்டோடும். ஆம் பிரியமானவர்களே கடவுள் நம்முடைய கையின் கிரியைகளை எல்லாம் ஆசீர்வதித்து கொடுத்திருக்கிறார். அதை எண்ணிப் பார்த்தவர்களாய் அந்த நாளிலே நம்முடைய முதற்கனி காணிக்கைகளை கடவுளுக்கென்று நாம் படைப்போம். கடவுள் நிறைவான ஆசீர்வாதங்களை நம்முடைய வாழ்விலே தந்து நம்மை வழி நடத்துவார். தொடர்ந்து நமது திருச்சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகைக்காக ஜெபித்துக் கொள்ளும்படியாக உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். வருடாந்திர ஸ்தோத்திர பண்டிகை முன்னிட்டு நடைபெற்று வருகின்ற Weekly contribution கொடுத்து அனைவரும் உற்சாகமாக பங்கு பெறுகின்றீர்கள். உங்கள் யாவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே நம்முடைய ஆலய ஆராதனையில் அநேக புதிய உறுப்பினர்கள் இணைந்து வருகிறார்கள், அவர்களை நான் வாழ்த்துகின்றேன் வரவேற்கின்றேன். யோசுவா கூறியது போல நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்ற வார்த்தையின் படி குடும்பமாக கர்த்தரை தொடர்ந்து ஆராதிப்போம். இறைவனின் ஆசியை நாம் பெற்றுக் கொள்வோம்.

இறைபணியில்
அருள்திரு. **J.ஜான் ஜெபலின் ஜோஸ்**

☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருக்காலும் வெட்கமடையாதபடி செய்யும்; உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும். சங்கீதம் 31: 1. இந்த ஒன்பது மாதமும் நம்மை வெட்கம் அடையாதபடி எல்லா நிலையிலும் பாதுகாத்து தமது நீதியின் நிமித்தம் நம்மை வழிநடத்தின நம் தேவாதி தேவனுக்கு மகிமையை செலுத்துவோம். கடந்த நாட்களிலும் நமது திருச்சபையின் குடும்பத்தினர் பலர் சுகவீனம் அடைந்த போதும் தேவனுடைய கிருபை உடனிருந்து எல்லா விக்கினங்களுக்கும் விலக்கி பாதுகாத்த அன்பிற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

இந்த 2024/25-ம் ஆண்டிற்கான Junior Church Director Mrs. Adlin Solomon அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அநேகர் ஆசிரியர்களாக பணியாற்ற தங்களை அர்ப்பணித்துள்ளனர். Junior Church ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் தாமே ஜூனியர் சர்ச் பிள்ளைகளை அவருக்கு பிரியமான பாதையில் கடந்து செல்ல உதவி செய்வாராக.

நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ள ஸ்தோத்திரப் பண்டிகைக்கு பல்வேறு நிலைகளில் நாம் ஆயத்தமாகி வருகிறோம் அந்த நாளின் ஆராதனைக்காகவும், பிற நிகழ்வுகளுக்காகவும், அதன் பொறுப்பாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் அனைவருக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். அக்டோபர் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை 13.10.2024 அன்று திருச் சபையில் அறிவித்தவாறு முதற்கனி காணிக்கை ஏற்கப்படும் மற்றும் பொருட் காணிக்கைகள் நவம்பர் மாதம் இரண்டாவது வாரம் ஏற்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் வருகிற 1-ம் தேதி முதல் ஆயர் தலைமையில் சபை அங்கத்தினர்களை அவர்களது இல்லங்களில் சந்தித்து அறுப்பின் தோத்திரப் பண்டிகைக்கான அழைப்பிதல் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கர்த்தர் தாமே நம் அனைவரையும் மற்றும் நம் தாயகத்தில் உள்ள குடும்பத்தின் மக்கள் அனைவரையும் பாதுகாத்து பராமரித்து வழி நடத்துவாராக ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**
☎ +971 58 5896 975



# ஆற்றல் அருளும் ஆண்டவர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

எழும்பு, எழும்பு சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; (ஏசாயா 52:1)

பாபிலோனியச் சிறையிருப்பின் போது இஸ்ரயேல் மக்கள் தங்கள் வரலாறு அழிந்துவிட்டது தங்கள் ஆற்றல் வெறுமையாகிவிட்டது என்று நினைத்தனர். ஏனெனில் அவர்கள் வாழ்வின் ஆதாரமான நாடும் இல்லை, கடவுளின் ஆலயமும் இல்லை. இந்நிலையில் ஏசாயா தீர்க்கன் மூலம் அவர்களைச் சந்தித்த கடவுள் அவர்களுக்குக் கொடுத்த அழைப்பு இது. இன்று தங்கள் பிரச்சனைக்குள் மூழ்கி இனி வாழ்வது எப்படி? என்ற கேள்விக்குறியோடு இருக்கும் மக்களைப் பார்த்து கடவுள் இவ்விதம் கூறுகிறார். எவ்விதமாய் நம்மைக் கட்டியிருக்கும் கட்டுக்குள் இருந்து எழுந்து வர வேண்டும் என்பதை காண்போம்.

**1. அழகுறு ஆடைகளை அணிந்து கொள்** (எசா 52:1)

ஆடை அலங்காரத்திற்கும், மகிமைக்கும் அடையாளம். (யாத் 28:40) அலங்கார ஆடை அணிதல் சிறப்பு நிகழ்வுக்குத் தன்னை ஆயத்தப்படுதலை காட்டுகிறது (எசு. 61:10). இங்கு இஸ்ரவேல் மக்கள் இனி தங்களுக்குள் எந்தச் சிறப்பு நிகழ்வுகளும், கொண்டாட்டங்களும் இல்லை என நினைத்து இருந்த காலத்தில் கடவுள் வரப் போகும் விடுதலை வாழ்வுக்காக ஆயத்தமடையும்படி அழைப்பு கொடுக்கின்றார்.

**2. புழுதியைத் தட்டிவிட்டு எழுந்திரு** (எசா.52:2)

தூசி அல்லது புழுதி நமது வாழ்வில் ஒட்டிக் கொண்டிருக்கிற பாவத்தைத்

குறிக்கிறது (சக் 3:4) எனவேதான் தவறு செய்த தாவீது என்னை ஈசோப்பினால் சுத்திகறியும் என்று கடவுளிடம் விண்ணப்பிக்கின்றார். எனவே தங்கள் பாவங்களைக் கடவுளின் சமூகத்தில் அறிக்கையிட்டு தூய்மை அடைந்தவர்களாய் எழும்ப நம்மை அழைக்கிறார்.

**3. கட்டுகளை அவிழ்த்து விடு** (எசா.52:2)

கட்டுகள் ஒரு மனிதனை செயல் இழக்கச் செய்து விடும். எப்போது அவன் கட்டுகளில் இருந்து விடுபடுகிறானோ அப்போது அவன் செயலாற்றல் உள்ளவனாக மாறுகிறான். அப் 3:8-இல் பிறந்தது முதல் நடந்த அனுபவம் இல்லாதவன். பேதுரு நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எழுந்து நட என்ற போது தன்னால் நடக்க முடியாது என்ற கட்டை தூர எறிந்தான். ஆற்றல் மிகுந்த சிம்சோன் பெண் ஆசை என்ற கட்டினால் விழுந்து போனான் (நியா.16:16,17) எனவே நம்மை அடக்கி வைத்திருக்கின்ற மனதின் கட்டுகளை அவிழ்த்து விட்டு நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

**4. ஆற்றலை அணிந்து கொள்** (எசா.52:1)

நமது ஆற்றலை பல வேலைகளில் நாம் அறியாமல் போகின்றோம். கிதியோன் ஆற்றல் மிகுந்த வீரன். ஆனால் சூழ்நிலை அவனைத் தளர்ந்து போகச் செய்திருந்தது. ஆனால் கடவுள் அவனிடம் உள்ள ஆற்றலை அறிய செய்கின்றார். (நியா 6:12). தாவீது கடவுள் தன்னுடன் இருக்கும் போது தனது ஆற்றல் எத்தகையது என்று அறிந்தபடியால் தைரியமாய்க் கோலியாத்தை எதிர்க்கத் துணிந்தான்.

அன்பானவர்களே தடைகள் வாழ்வில் வரலாம், ஏமாற்றங்கள், தோல்விகள் வரலாம். ஆனால் கடவுள் நம்முடன் இருக்கும்போது அவைகள் நிரந்தரமல்ல. இதை புரிந்து கொண்டு நம்பிக்கையுடன் தைரியமாய் செயல்படுவோம். கடவுள் தானே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# யோபுவின் மனைவி

வேதத்தில் பெயர் எழுதப்படாதவர்களின் வரிசையில் யோபுவின் மனைவியும் வருகிறாள். யோபு 1:1, யோபுவை உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்று நற்சாட்சி கூறுகிறது. இப்படி உயர்ந்த குணங்களை கொண்ட கணவனைப் பெற்ற பாக்கியசாலி இவள். பண்டைக் காலத்தில் செல்வ செழிப்புக்கு முக்கிய அடையாளமாக காணப்படுவது அவர்களின் கால்நடைகள். யோபுவுக்கு 7000 ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 500 ஏர் மாடுகள், 500 கழுதைகள் இருந்தன என்று யோபு 1:2 சொல்லுகிறது. யோபுவின் மனைவி இப்படிப்பட்ட செல்வாக்குள்ள கணவனையே பெற்றிருந்தாள். கண்டிப்பாக நன்றாக வாழ்ந்து எல்லாவற்றையும் அனுபவித்திருப்பாள். கர்த்தர் இவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் 7 குமாரையும், 3 குமாரத்திகளையும் கொடுத்து ஆசீர்வதித்திருந்தார்.

ஒரு நாள் தேவபுத்திரர் கர்த்தரின் சன்னதியில் வந்தபோது சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான். கர்த்தர் யோபுவை குறித்துச் சொன்ன

நற்சாட்சியை சாத்தான் கேட்டு “அவன் கர்த்தரிடம் நீர் அவன் கையின் கிரியை ஆசீர்வதித்ததினால் அவன் சம்பத்து பெருகிற்று. இப்பொழுதும் அவனுக்கு உண்டான ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் நீர் தொட்டால் அவன் உன் முகத்திற்கு எதிரே உம்மைத் தூஷிப்பான்” என்றான். எனவே கர்த்தர் யோபோவுக்கு உண்டான எல்லாவற்றையும் தொட சாத்தானுக்கு அதிகாரம் கொடுத்தார். அந்த அனுமதியுடன் பூமியில் இறங்கிய சாத்தானின் அம்புகளால் ஒரே நாளில் யோபுவின் மந்தைகள் மற்றவைகளால் திருடப்பட்டு கொண்டு போகப்பட்டன. 10 பிள்ளைகளும் சடுதியில் மரித்தார்கள். யோபு “கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்” என்று கூறி தேவனைத் துதித்தான். தனது இழப்புகளினிமித்தம் அவரை தூஷிக்கவில்லை. தனது திட்டங்கள் தோல்வியாகி ஏமாற்றம் அடைந்த சாத்தான் மறுபடியும் தேவ சந்நிதியில் வந்து நின்றான்.யோபுவைக் குறித்து தேவன் கூறிய நற்சாட்சி கேட்ட சாத்தான் யோபு 2:4,5 “அவன் எலும்பும், மாம்சமுமாகிய சரீரதத்தை நீர் தொடுவீரானால் அவன் உமது முகத்திற்கு எதிரே தூஷிப்பான்” என்று மறுபடியும் கர்த்தரிடம் சொன்னான் (யோபு 2:4,5). கர்த்தர் சாத்தானிடம் அவன் உன் கையில் இருக்கிறான். அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு என்றார் (யோபு 2:6). சாத்தான் யோபுவை உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் வாதித்தான், யோபு ஒரு ஓட்டை எடுத்து தன்னைச் சுரண்டிக் கொண்டு வேதனையுடன் சாம்பலில் உட்கார்ந்தான் (யோபு 2:8).

தன் கணவன் கொடிய பருக்களால் கஷ்டப்படுவதைப் பார்த்து மனம் இரங்கி அவனைக் கவனிக்க வேண்டிய மனைவி யோபுவைப் பார்த்து “நீ இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ?. தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்” என்றாள். மதியீன ஜனங்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிப்பார்கள் என்று சங் 74:18 சொல்லுகிறது. கர்த்தர், மனைவியை ஒரு புருஷனுக்கு வாழ்க்கைத் துணையாகக் கொடுக்கிறார்.

மனைவியானவள் கணவனுக்கு ஏற்ற துணையாக துயரத்திலும், துன்பத்திலும், வாழ்விலும், தாழ்விலும் அவனுடன் நிற்க வேண்டும்.

கணவனைத்தாங்குவதற்காகவேகர்த்தரால்கொடுக்கப்பட்டவள்மனைவி. அவளுடைய வார்த்தைகள் சோதனைக் காலங்களில் உத்தமமாய் நிற்க உதவி செய்வதை விட்டு அவனை வேதனைப்படுத்துவது போல் இருந்தது.

பாடுகளின் நேரத்தில்தான் ஒரு மனிதனின் உண்மையான மன நிலைமை வெளிப்படுகிறது. போராட்டத்தின் பாதையில் யோபு உறுதியாய் இருந்தான். ஆனால் யோபுவின் மனைவி தன் உண்மை சுபாவத்தைக் காண்பித்தாள். கர்த்தரைத் தூஷித்தாள். கணவனையும் தேவனை தூஷித்து ஜீவனைவிடச் சொன்னாள். நன்றாக வாழ்ந்த காலத்தில் எல்லாவற்றையும் சேர்த்து அனுபவித்த இவள் வேதனையின் நாட்களில் தேவனைத் தூஷிக்கக் கூறியது ஏன்? அவள் பிசாசின் ஆயுதமாக செயல்பட்டாள். யோபுவின் நிலைமையோ மனைவியைப் பார்க்கிலும் அதிகமான பாடுகள். சரீரத்தில் கொடிய பருக்கள், புண்கள், மனதிலே கலக்கம். ஆனால் யோபு தன் உத்தமத்தை விட்டுப் பின் வாங்கவில்லை. தன் மனைவியிடம் நீ பயித்தியக்காரி பேசுகிறது போல் பேசுகிறாய். தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான் (யோபு 2:10).

நமது கணவர் அல்லது மனைவி, நண்பர், உற்றார், உறவினர் ஆகியோர் இவ்விதத் துன்பங்கள் அனுபவிக்கும் போது அவர்களிடம் நமது அணுகுமுறை எப்படி இருக்கிறது? இப்படிப்பட்ட துயர நேரங்களில் அவர்களிடம் நாம் எப்படிப் பேசுகிறோம்? செயல்படுகிறோம் என்பதை கர்த்தர் கேட்கிறார், பார்க்கிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது. தேவனுக்கு விரோதமாய் பேசுவதற்கு சாத்தான் நம்மைத் தூண்டிவிட இடம் கொடுக்கக் கூடாது. எந்தச் சூழ்நிலையிலும் ஒருபோதும் தேவனை தூஷிக்க கூடாது. யோபுவின் நீடிய பொறுமை நம்மில் காணப்பட வேண்டும். தேவ நாமத்திற்கு மகிமையாய் வாழ கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

**J.ஜெனு ஜெபலின்**

ஆயர் அம்மா



# மிஷனெரி
# MELVIN ERNEST TROTTER

மில் டிராட்டர் 1870-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை ஒரு குடிகாரர். எனவே தன் மகனையும் குடிகாரனாகவே வளர்த்தார். வாழ்க்கையில் வெறுப்படைந்த மெல் டிராட்டர் 1897-ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடன், கடைசியாக குடித்து வெறித்து செத்துவிடலாம் என்ற தீர்மானத்துடன் ஓர் இடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது ஒரு கடவுளின் ஊழியர் அழைத்தபடி ஒரு நற்செய்திக் கூட்டத்திற்கு சென்றார். அங்கு அந்தப் பிரசங்கியார் கேட்ட கேள்வி "இயேசு கிறிஸ்து உன்னை நேசிக்கிறார். அவருக்கு உன் உள்ளத்தில் இடம் தருவாயா?". இந்தக் கேள்வி மெல் டிராட்டர் உள்ளத்தில் ஈட்டி போன்று பாய்ந்தது. அன்றிலிருந்து மனம் மாறினார். சமுதாயத்தில் குடிக்கிறவர்களை திருத்தி அநேக சீர்திருத்த மையங்களை ஏற்படுத்தினார். 1905 - ஆம் ஆண்டு இவர் பார்வையில் 68 மையங்கள் செயல்பட்டன. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் சிறப்பான ஊழியத்தை செய்தார்.



# Differently abled Dignity and Dependence

A busy world a busy life with no time for anything is a feature of us in today's world. We never take time to think or interact with each other or make an effort to acknowledge or intermingle with normal human beings. In this hectic life when we do not take time to relate or interact with each other. When we are so indifferent or detached from normal beings will we even think of the differently abled? A community does not mean that everyone is normal or everyone is healthy there are people who are well, people who are unwell, physically sound, physically disabled, mentally retarted etc. Just take moment to think how challenging it is to be differently abled. Life in their eyes must be beautiful for some but a fear for the others. The insecurity and the challenge they and their families have to overcome is a milestone task which God has placed in their hands.

In Genesis 4:11 the Bible says The Lord said to him, "Who gave human beings their mouths? Who makes them deaf or mute? Who gives them sight or makes them blind? Is it not I, the Lord? 12 Now go; I will help you speak and will teach you what to say." So we understand God has created each and every one with a purpose. This verse was in response to Moses who said "Pardon your servant, Lord. I have never been eloquent, neither in the past nor since you have spoken to your servant. I am slow of speech and tongue." Ex 4:10.

All human beings have something special within us and some weaknesses too, and so do specially abled people. We as society must help specially abled people to focus on their strengths, instead of their weaknesses so that they can enjoy their life like us. We should also accept them as equal and not

someone who need to be pitied. They should be given equal opportunities to come forward. Specially abled people don't want to be treated as different, they want to be treated as equal. We must interact with them and make them feel normal. Opportunities must be given to these people to motivate them to do something good in life.

Life being disabled has its ups and downs, but so do other people. Many people have the ability to do what they want, when they like, but being disabled can have its limitations. At times they get very frustrated by not being able to do things other people take for granted such as walking unaided or planning a journey. Sometimes must be grateful for what I can do because I could be a lot worse off; at least we can still walk and can do some things for myself.

God created human being in his image and likeness. God's image is present in people with disabilities and in the able-bodied alike. God's image in every human grants the human dignity to everyone. It concerns the person with disabilities to the same extent as it does for an able-bodied person, and it results from being human.

Disability is Virtuous Suffering and should be accepted as God's Blessings (2 Corinthians 12:9)

But God said, "My grace is sufficient for you, for my power is made perfect in weakness." Therefore, I will boast all the more gladly of my weaknesses, so that the power of Christ may rest upon me

The human dignity of a person with disabilities does not differ from the dignity of other people. Their life is blessed and sanctified like any other normal human being as God himself has told in

Luke 14: 13,14 -13 But when you give a feast, invite the poor, the crippled, the lame, the blind, 14 and you will be blessed, because they cannot repay you. For you will be repaid at the resurrection of the just."

contribution by

*Nancy Agustin*



# பெற்றோரின் பொறுப்பு

**பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது.**
(கொலோசெயர் 3:14, 15).

### 8. நீங்கள் எப்போதும் மற்றவர்களிடம் குற்றம் காணும் நபரா? (Are your always a Critic?)

நீங்கள் எப்போதும் மற்றவர்களிடம் குற்றம் காணும் நபரா? 'நான் எப்போதும் சரி மற்றவர்கள் செய்வது எப்போதும் தவறு' எனக் கருதும் மனோபாவம் கொண்டவரா நீங்கள்? I am always right - others are always wrong" என்னும் உங்கள் குணபாவம் உங்களுக்கே ஊறு விளைவிக்கும் தன்மையுடையது, அது ஒரு மனநோய் என்று அறியுங்கள்.

### 9. குறை கூறுவோரைத் தடுக்காதீர்கள் அனுமதியுங்கள் (Allow Criticism don't stop)

பிறர் குறித்துக் கூறும் குறைகள் உங்களைக் கோபமுறச் செய்கிறதா? நிதானமாகச் சிந்தியுங்கள். உங்களைக் குறித்த அவர்களின் மதிப்பீடு ஏன் உண்மையாயிருக்க கூடாது? பெரும்பாலும், உங்களைக் குறித்து உங்கள் எதிரிகளின் மதிப்பீடே உண்மை பிறரிடம் குறை காண்பதை விடுத்து, அவர்களின் மறு பக்கத்தைப் பார்த்து என் புகழவும், மெச்சவுங் கூடாது? உங்களில் குறையிருந்தால் ஏன் திருத்திக் கொள்ளக்கூடாது?

**10. கோபத்தைப் சரியாகப் பயன்படுத்துங்கள்** (Have constructive anger)

சில வேளைகளில் உங்கள் கோபம் நியாயமானதாகவும் இருக்கலாம் உங்கள் உடல் அல்லது உணர்ச்சிகள் பிறரால் காயப்படுத்தப்படும்பொழுது, உங்கள் பாதுகாப்புக்கு ஆபத்து வரும்பொழுது, உங்களைத் தற்காத்துக் கொள்ளக் கோபங்கொள்ளல் அவசியம் எனக் கருதும் பொழுது, உங்களுக்கோ, பிறருக்கோ அல்லது சமுதாயத்திற்கோ அநீதி நிகழும் பொழுது கோபம் எழுந்தால் அது நியாயமே.

ஆனால், உங்கள் நியாயமான கோபத்தை, உங்கள் சுயநலமான கோபத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. நியாயமான கோபம் எழும் வேளைகளில் உங்கள் கோபத்தை எவ்வாறு வெளிப்படுத்துவது என முன்னதாவே திட்டமிட்டு, பின் கோபத்தைக் காட்டுங்கள். ஆகையால்தான் ஔவைப் பிராட்டி 'ஆறுவது சினம்' என்று கூறினார்.

உங்கள் கோபத்தால் பிறர் உணர்ச்சிகளை நொறுக்கிப்போடுவதைவிட, அதையே ஏன் பிறருக்கு உதவப் பயன்படுத்தக் கூடாது? பிறர் உங்கள் கோபத்தைப் புரிந்துகொண்டு திருந்தும் வண்ணம், சரியான நேரத்தில் சாதுரியமாக உங்கள் கோபத்தை வெளிப்படுத்துங்கள்.

சரியான காரணத்திற்காக, சரியான நபர்களிடம், சரியான தருணத்தில், சரியான முறையில், சரியான அளவு கோபப்படும் மனிதர் கண்டிப்பாகப் போற்றப்பட வேண்டியவர். (A person who is angry on the right grounds, against the person, in the right manner, in the right moment and at the right length of time deserves great praise.),

**11. தவறுகையில் தட்டிக்கேட்க** (Correct, when err)

'நான் எப்போதும் சரியாகச் செயல்படுகிறேன்' என்று உங்களால் கூற இயலாது. உணச்சி வயத்துடன் எடுக்கப்படும் எந்த முடிவும் தவறாகவேயிருக்கும்.

தாவீதிற்கு அமைந்த நாத்தான் போன்று, நீங்கள் தடம்புரள்கையில் கண்டித்துணர்த்த ஆத்மார்த்தமான ஒரு நபர் தேவை. அப்படிப்பட்ட நண்பரிடம் உங்கள் உணர்வுகளைக் குறித்து மனம் விட்டுப் பேசி அவ்வப்போது ஆலோசனை பெற்றுச் செயல்படுங்கள். அப்படிப்பட்ட அந்த நண்பர் மனைவியாகவும் இருக்கலாம். மனைவிக்குக் கணவனே நண்பனாக இருக்கலாமல்லவா?

**12. ஆண்டவரிடம் ஆலோசனை பெறுங்கள்** (Pray to get guidance from the Lord)

உங்கள் பிரச்சனையான உணர்ச்சியைக் குறித்து, உங்கள் இறைவேண்டலில் (prayer) ஆண்டவரிடம் மனம் திறந்து கூறி ஆலோசனை

பெறுங்கள். கோபத்தைக் குறித்துத் திருமறையில் கூறியுள்ள திருவசனங் களைப் படியுங்கள். அவற்றை கள் வாழ்க்கையின் வழித் துணையாகக் உங்கள் கொள்ளுங்கள்.

## கோபத்தைத் தவிருங்கள்

நீதிமொழிகள் 15:1 சாந்தமான மறுமொழி சினத்தை அகற்றும்; கடுஞ் சொல்லோ கோபத்தை எழுப்பும்.

நீதிமொழிகள் 27:4 சினம் கொடியது; சீற்றம் பெரு வெள்ளம்;

## கோபத்தில் நிதானமாக இருங்கள்

நீதிமொழிகள் 15:18 கோபக்காரன் கலகத்தின் காரணியாயிருக்கிறான்; சாந்தமுள்ளவன் கலகத்தை நிறுத்துகிறான்.

நீதிமொழிகள் 19:11 கோபத்தை மனுஷனுடைய விவேகம் (அறிவு) அவன்

## சுயநலமான கோபம் வேண்டாம்

எபேசியர் 4:31 சகலவிதக் கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.

கொலோ.3:8 இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும், வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளை யெல்லாம் விட்டுவிடுங்கள்.

## பழிவாங்கும் கோபம் வேண்டாம்

எபேசியர் 4:26 நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யா திருங்கள்; சூரியன் மறைகிறதற்கு உங்கள் எரிச்சல் தணியக்கடவது.

சங்கீதம் 4:4 நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யா திருங்கள்; (இரவில்) உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டிருங்கள்.

## குழந்தைகளைத் தண்டித்தல்

நீங்கள் கோபமாக இருக்கும்பொழுது குழந்தைகளைத் தண்டிக்காதீர்கள்; சில வேளைகளில் உணர்ச்சி வேகத்தில் பிள்ளைகளை அளவிற்கதிமாகத் தண்டித்துவிடும் வாய்ப்புகளுள்ளன.

'தண்டிப்பேன்' என்று மிரட்டாதீர்கள். சொன்னால் சொன்னபடி செய்யும் பெற்றோர்களாக இருங்கள். வெறுமனே மிரட்டிக்கொண்டே இருந்தால், குழந்தைகள் சில நாட்டகளில் உங்களுடைய மிரட்டலைக் கண்டு கொள்ளமாட்டார்கள்.

# கிறிஸ்தவ அறிவு அபிவிருத்திச் சங்கம் (S.P.C.K.)



இவரை ஒரு சிறந்த நிர்வாகி என்று சொல்ல இயலாது. சில சமயம் இங்கிலாந்திலிருந்து காலம் தாழ்ந்து பணம் வரும். அருட்பணி தோய்வின்றித் தொடர்ந்து நடந்திட, தேவையான பணத்தைக் கடனாக வாங்குவார். பணம் வந்தவுடன் கடனை அடைப்பார். சில சமயங்களில் மிகுதியான பணம் வரும், அச்சமயங்களில் தேவையானது போக, மீதியான பணத்தை முதலீடு செய்வார். ஒரு சமயம், இவ்வாறு முதலீடு செய்த பெருந்தொகையை இழந்தார். இதன் காரணமாகக் கடன்பட்டோருக்கான சிறையில் 18 மாத காலம் அடைத்து வைக்கப்பட்டார். பவுலும், சீலாவும் பிலிப்பி பட்டிணத்தில் சிறையிலடைக்கப்பட்ட போது கடவுளைப் போற்றிப் பாடினார்கள் அல்லவா? அவர்களைப் போலவே பெப்ரீசியஸ் அவர்களும் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் கடவுளை நினைத்து மனதுருகிப் பாடினார். சிறைத் தண்டனை மாத்திரமல்ல, வேறு பல இன்னல்களும் இவருக்கு ஏற்பட்டன. 1746-ல் பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றிய சமயத்தில் தமது சபையாரோடும் பள்ளிப் பிள்ளைகளோடும் கரும்பட்டிணத்தை விட்டுப் பழவேற்காட்டிற்கு ஓடிப்போனார். பழவேற்காடு டச்சுக்காரரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அங்கு இரண்டாண்டுகள் தங்கியிருந்தார்கள். மீண்டுமாகச் சென்னையை ஆங்கிலேயர் கைப்பற்றிய பிறகே, அவரும் மற்றவர்களும் சென்னைக்குத் திரும்பினர்.

## வேப்பேரியில் S.P.C.K. இல்லம்

பெப்ரீசியசும், மற்றவர்களும் சென்னை திரும்பியபோது, தங்களுடைய கட்டிடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். வேப்பேரிக் கிராமத்திற்கு அருகிலிருந்த ஓரளவு நிலத்தையும், ஒரு கோயிலையும் இழப்புக்கு ஈடாக அளிக்க ஆளுநர் வாக்களித்தார். உரோமன் கத்தோலிக்கரான ஒரு பெரும் வணிகர், இந்த ஆலயத்தைக் கட்டத் தொடங்கியிருந்தார். கத்தோலிக்கராக இருந்த பிரெஞ்சுக்காரரின் ஆளுகைக்குள் சென்னை இருந்தபோது இது கட்டி முடிக்கப்பட்டது. உரோமன் கத்தோலிக்கர், பிரெஞ்சுக்காரருக்கு ஆதரவாக இருக்கக்கூடும் என்று ஆளுநர் எண்ணியதால் அந்தச் சபையாரைச் சென்னையிலிருந்து விரட்டினார். இதனால் வேப்பேரியில் அந்த ஆலயம் வெறுமையாக இருந்தது.

பெப்ரீசியஸ் வேப்பேரிக்கு இடம் மாறிச் செல்வதற்கு முன் கரும்பட்டிணத்தில் வீடொன்றை வாடகைக்கு அமர்த்தி அங்கே தங்கியிருந்தார். 1752-ல் மழைக்காலத்தில் பெய்த அடைமழையில் இவருடைய வீடும், இன்னும் பல வீடுகளும் சேதமடைந்தன. வேறு வீடு ஒன்றை அமர்த்திக்கொள்ள அவரால் இயலவில்லை. எனவே ஆளுநரைச் சந்திக்கப் போனார். நிகழ்ந்தவற்றைக் கூறி வேப்பேரியில் ஆளுநரால் தங்களுக்குக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்ட சென்று தங்கிட அனுமதி கோரினார். அனுமதியும் கிட்டியது. அவரும் அவருடைய சபையாரும் அங்கே சென்று தங்கினர். இப்பொழுதுதான் இச்சபையாருக்குக் கடவுள் வழிபாடு நடத்த ஓர் ஆலயம் சொந்தமாகக் கிடைத்தது. அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.


சென்னையிலிருந்து பயணம் செய்து, அரைமணி நேரத்தில் சேரக்கூடிய தொலைவில் மிஷனெரிமார் தங்கியிருந்தனர். வீட்டு மதிற்சுவரைச் சுற்றிலும் வயல்களும் தோட்டங்களும் இருந்தன. ஆனால், அது அவ்வளவு பாதுகாப்பான இடமல்ல. மீண்டுமாகப் பிரெஞ்சுக்காரர் 1758 -ல் சென்னை நோக்கிப் படை எடுத்து வந்து கோட்டையை முற்றுகையிட்டனர். வேப்பேரி மையத்தைக் கொள்ளையடித்தனர். மிஷனெரிமாரிடம் இருந்த அனைத்தையும் கவர்ந்து சென்றனர். கோயிலில் தஞ்சம் புகுந்தோரிடம் இருந்தவற்றையும் பறித்துக் கொண்டனர். மீண்டுமாகப் பெப்ரீசியசும், அவரது சபையாரும் பழவேற்காட்டுக்கு ஓடிப்போயினர். பிரெஞ்சுக்காரர் ஓராண்டுக்காலம் சென்னையைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். அதுவரை பழவேற்காட்டில் அவர்கள் தங்கியிருந்து அதன் பிறகு சென்னைக்கு திரும்பினர்.

அடுத்து ஹைதர் அலியால் துன்பங்கள் ஏற்பட்டன. அவருடைய படைகள் நோக்கி வரும்போதெல்லாம் புனித ஜார்ஜ் கோட்டையில் தஞ்சம் புகுந்தனர். 1791- ல் திப்புசுல்தான் மையத்தைக் கொள்ளையிட்டார். போர் முடிந்தபின் இழப்பை ஈடு செய்யவும் ஆலயத்தைப் பழுது பார்த்து விரிவு செய்திடவும் திப்பு சுல்தான் பணம் கொடுத்தார். கட்டுமானப் பணிக்கென வாங்கிய பொருட்கள் தரமானவை அல்ல. கட்டுமானப் பணியும் வேலைத்திறன் மிக்கதாக இல்லை. வளர்ந்துவரும் சபைக்கு ஏற்றவாறு ஆலயத்தை விரிவுபடுத்துவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. எனவே 1823-ல் இன்று தூய மத்தியாஸ் ஆலயம் என்றழைக்கப்படுகின்ற ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

## தென்கோடி வரை பரவிய ஊழியம்

ஏறத்தாழ 40 ஆண்டுகளாக S.P.C.K. சென்னை, கடலூர் ஆகிய பட்டிணங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் பணி செய்தது. தகுதியான ஆங்கிலேய மிஷனெரிமார் கிடைக்காத காரணத்தால் ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரிமாரையே தொடர்ந்து நியமித்தது. அவர்களுக்கு ஒரே ஒரு நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டிருந்தது. அதாவது வழிபாடுகளில் அவர்கள் கட்டாயமாக ஆங்கிலிக்கன் ஜெபப்புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதாம்.

S.P.C.K. தனது பணியைத் திருச்சிராப்பள்ளி வரை விரிவாக்கம் செய்திட சந்தர்ப்பம் கிடைத்தபோது, அது பிறிதோர் ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரியான அருள்திரு. C.F. சுவார்ட்ஸ் என்பாரின் உதவியுடன் நடந்தது. சுல்ட்ஸ் போன்றே சுவார்ட்சும் அநேக ஆண்டுகளாகத் தரங்கம்பாடியில் பணிசெய்த பிறகு S.P.C.K. பணித்தளத்திற்கு மாறுதல் பெற்று வந்தார். தென்னிந்தியாவில் பணியாற்றிய S.P.C.K. மிஷனெரிமாரில் பெரும் புகழ் பெற்றவர் சுவார்ட்ஸ் என்று சொன்னால் அது முற்றிலும் உண்மையாகும்.



மிஷனெரிமார் பயணம் செய்த கப்பல்

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 41 - 50

1. யார் முணுமுணுத்தார்கள்?
2. "என் ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்" எந்த சங்கீதங்களில் வருகிறது?
3. எதினால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது?
4. பரிசுத்த பர்வதத்திற்கும் வாசஸ்தலங்களுக்கும் கொண்டுபோவன எவை?
5. எங்கள் வயிறு எதோடு ஒட்டியிருக்கிறது?
6. ராஜ்யத்தின் செங்கோல் செங்கோலாயிருக்கிறது.
7. நேசப்பாட்டாகிய சங்கீதம் எது?
8. பூமி உருகிப் போயிட்டு எதனால்?
9. ஜனங்களில் பிரபுக்கள் யாருடைய ஜனங்களாக சேர்க்கப்படுகிறார்கள்?
10. பூமியனைத்திற்கும் ராஜா யார்?
11. எதினிமித்தம் சீயோன் பர்வதம் மகிழும்?
12. "பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக" என்ன செய்ய வேண்டும்?
13. கனம் பொருந்தினவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறான்?
14. கர்த்தர் தம்முடைய ஜனத்தை நியாயம் தீர்க்க வரும்போது எதைக் கூப்பிடுவார்?
15. கர்த்தர் யாருக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று கூறுகிறார்?

கடந்த செப்டம்பர் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jeshwanth
2. Mrs.Kavitha Johnson
3. Mrs.Rubavathi
4. Mrs.Ruby Jeyaseelan
5. Mrs.Baby Jesudass
6. Mrs.Thangamani Anbalagan
7. Mrs.Selina Stephen
8. Mrs.Benisha
9. Mrs.Syilya Sekar
10. Mrs.Sheela Hendry

**Children's Corner Colouring**

1. S.Sanhedrin
2. A.Achsha Davina
3. J.Jaylyn Johanna
4. J.Jerlyn Joshna

Kid's Corner

# True Discipleship

## Key Theme
God wants us to follow Him

## Key Passages
Matthew 16:24-26
Matthew 22:36-37

## READ the Word

**Jesus Talks About Discipleship**
In the Bible, Jesus tells us all about discipleship. To be a disciple of Jesus means to **follow Him.** A disciple (or follower) of Jesus loves Him above all else and is willing to give up all the world has to offer for Him. **Read more in Matthew 16:24-26; 22:36-37.**

**Answer the following questions:**

1. Who must we deny before we can follow Jesus?
2. Who should always be the most important one in our life?
3. We should love God with all our ________________, ________________, and ________________.

**ANSWERS:** 1) Ourselves. 2) Jesus. 3) Heart, soul, and mind.



## Who Helps Us?

Jesus wants to be the most important one in our lives. That can be hard to do. But Jesus promised a Helper. Fill in the missing vowels in the boxes to find out who the Helper is.

a e i o u

| H | | L | Y | | |
|---|---|---|---|---|---|
| S | P | | R | | T |

## Learn the Word

Write the letters of the numbers they have replaced on the clock to fill in the blanks. Then, memorize Matthew 16:24.




_I_f _a_n_y_o___e
4 1 12 6

de___i___es to c___m___
10 9 7 2

af___er M___, ___e___
11 2 5 11

___im den___ ___im___elf,
3 12 3 10

___nd ___ake u___
1 11 8


___i___ c___ ___s___, and
3 10 9 7 10

f___l___ow Me.
7 5

(MATTHEW 16:24)

## COLOR This

Grab your art supplies and color this picture of Jesus teaching about discipleship.



Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.

+971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st Oct**
MASTER SHADRACH RICKY MATTHIO
MRS TILAKAVATHI
MR MANUEL RAJ JOHN

**2nd Oct**
MR A. AKASH JEBANATH

**3rd Oct**
MASTER RATHEESH GNANADOSS
MRS ESTHER KALA.A
MRS EBSIBA

**4th Oct**
MASTER SAMUEL JEBA DOSS

**5th Oct**
MRS Judith Blessy Bernica

**6th Oct**
MRS VANITHA P.

**7th Oct**
MRS R.MERITA JEYAKUTTI
MR ROBERT
MASTER KAVIN IMMANUEL
MRS ANUSHYA

**8th Oct**
MASTER AMOS JERE
MR ROSE ROBIN .S

**9th Oct**
MRS MARIA THERASA RANI.A

**10th Oct**
MR AUGUSTINE VIJAYAN DEV PETER
MR JEBAHAR
MRS BENIL SHAD.G
MR J. JOHIN IMMANUEL

**11th Oct**
MRS JEBA SHALU JEGAN

**12th Oct**
MRS JASMINE MANGALRAJ

**13th Oct**
MISS KAREN EUNICE K.
MASTER DIYAS DINESH.

**14th Oct**
MRS PUSHPALATHA LATHA
MR PRAVIN JONES

**16th Oct**
MASTER JESTUN PAUL DASS
MR ALEX JEYARAJ
MR SHYAM BABU

**17th Oct**
MRS MADONA ANBAZHAGAN
MASTER RIJO CAREY

**18th Oct**
MR SUNNEY JOYAL S.
MISS JENNIFAR LIGHTEN
MR JOSHUA VENUGOPAL E.
MR JAMES WESLY

**20th Oct**
MR DEIVASIGAMANI S.
MISS RENY LYDIA

**21St Oct**
MASTER JEFFRY G.
MASTER JEFFREY

**22nd Oct**
MASTER EMMANUEL CARSTEN Y.
22-Oct-08
MISS GRACIA LAUREN
MASTER JOEWIN DANIEL RAJ

**23rd Oct**
MRS THANGAMANI ANBALAGAN
MASTER JADEN SOLOMON

**24th Oct**
MASTER AREN PETER AUGUSTINE
MRS EARLY STAR SATHIYA
MR JOHN JOSHUA
MISS ADRINA ISAC

**26th Oct**
MR PRAVINTH SAMUEL VETHANAYAGAM
MRS K. HELINATH PAULINE

**27th Oct**
MRS JOANNA KEZIAH

**28th Oct**
MISS STENI KOIL RAJ
MASTER JOHN ABRAHAM
MASTER ADRIEL JONAS
MISS EDLYN
MRS TAMIL ELAKYA

**29th Oct**
MR RAJESH KUMAR C.
MRS R. MONICA RAJA KUMAR

**30th Oct**
MISS JENEFA SUNDARA RAJAN
MISS CATHERINE VIJAY ANAND
MASTER JASON RAJ J.
MRS SHERMI MOL

**31st Oct**
MR EDWIN D.
MASTER HANSLIN DYLAN

## Wedding Anniversary

**6th Oct**
MR. PREM TITUS S. & MRS. DIVINA PREM K.

**9th Oct**
MR. SHAJAN ABRAIN RAJ & MRS. ANU PRIYA. G

**19th Oct**
MR. EDWIN D. & MRS. SUNI SMILA J.
MR. YOVAN MAHENDRAN & MRS. SUBHA

**22nd Oct**
MR. CHRISTOPHER SANTHA SEELAN & MRS. VANITHA

**25th Oct**
MR. SOLOMAN VIJAY ANAND S. & MRS. ADELINE SOLOMAN

**26th Oct**
MR. SANTHA KUMAR SELVARAJ & MRS. ARUL RUBAVATHY

**27th Oct**
MR. KINGSTON V. & MRS. JULIE VIOLET GRACE K.

**29th Oct**
MR. CHRISTOPHER ASIR DOSS S. & MRS. KOHILA RANI V.

# DAILY BIBLE READING OCTOBER 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 TUE | ஆதியாகமம் /GENESIS 47:1-31 | ஆதியாகமம் /GENESIS 48:1-21 |
| 02 WED | ஆதியாகமம் /GENESIS 49:1-33 | ஆதியாகமம் /GENESIS 50:1-26 |
| 03 THUR | யாத்திராகமம் /EXODUS 1:1-22 | யாத்திராகமம் /EXODUS 2:1-25 |
| 04 FRI | யாத்திராகமம் /EXODUS 3:1-23 | யாத்திராகமம் /EXODUS 4:1-31 |
| 05 SAT | யாத்திராகமம்/EXODUS 5:1-23 | யாத்திராகமம் /EXODUS 6:1-30 |
| 06 SUN | சங்கீதம் / PSALMS | சங்கீதம் / PSALMS |
| 07 MON | யாத்திராகமம் /EXODUS 7:1-25 | யாத்திராகமம் /EXODUS 8:1-32 |
| 08 TUE | யாத்திராகமம் /EXODUS 9:1-35 | யாத்திராகமம் /EXODUS 10:1-29 |
| 09 WED | யாத்திராகமம் /EXODUS 11:1-10 | யாத்திராகமம் /EXODUS 12:1-28 |
| 10 THUR | யாத்திராகமம் /EXODUS 12:29-51 | யாத்திராகமம் /EXODUS 13:1-22 |
| 11 FRI | யாத்திராகமம் /EXODUS 14:1-31 | யாத்திராகமம் /EXODUS 15:1-27 |
| 12 SAT | யாத்திராகமம் /EXODUS 16:1-35 | யாத்திராகமம் /EXODUS 17:1-16 |
| 13 SUN | சங்கீதம் / PSALMS | சங்கீதம் / PSALMS |
| 14 MON | யாத்திராகமம் /EXODUS 18:1-27 | யாத்திராகமம் /EXODUS 19:1-25 |
| 15 TUE | யாத்திராகமம் /EXODUS 20:1-26 | யாத்திராகமம் /EXODUS 21:1-36 |
| 16 WED | யாத்திராகமம் /EXODUS 22:1-31 | யாத்திராகமம் /EXODUS 23:1-33 |
| 17 THUR | யாத்திராகமம் /EXODUS 24:1-18 | யாத்திராகமம் /EXODUS 25:1-39 |
| 18 FRI | யாத்திராகமம் /EXODUS 26:1-37 | யாத்திராகமம் /EXODUS 27:1-21 |
| 19 SAT | யாத்திராகமம் /EXODUS 28:1-43 | யாத்திராகமம் /EXODUS 29:1-46 |
| 20 SUN | சங்கீதம் / PSALMS | சங்கீதம் / PSALMS |
| 21 MON | யாத்திராகமம் /EXODUS 30:1-38 | யாத்திராகமம் /EXODUS 31:1-18 |
| 22 TUE | யாத்திராகமம் /EXODUS 32:1-35 | யாத்திராகமம் /EXODUS 33:1-23 |
| 23 WED | யாத்திராகமம் /EXODUS 34:1-35 | யாத்திராகமம் /EXODUS 35:1-35 |
| 24 THUR | யாத்திராகமம் /EXODUS 36:1-38 | யாத்திராகமம் /EXODUS 37:1-29 |
| 25 FRI | யாத்திராகமம் /EXODUS 38:1-31 | யாத்திராகமம் /EXODUS 39:1-43 |
| 26 SAT | யாத்திராகமம் /EXODUS 40:1-38 | லேவியராகமம் /LEVITICUS 1:1-17 |
| 27 SUN | சங்கீதம் / PSALMS | சங்கீதம் / PSALMS |
| 28 MON | லேவியராகமம் /LEVITICUS 2:1-16 | லேவியராகமம் /LEVITICUS 3:1-17 |
| 29 TUE | லேவியராகமம் /LEVITICUS 4:1-35 | லேவியராகமம் /LEVITICUS 5:1-19 |
| 30 WED | லேவியராகமம் /LEVITICUS 6:1-30 | லேவியராகமம் /LEVITICUS 7:1-38 |
| 31 THUR | லேவியராகமம் /LEVITICUS 8:1-36 | லேவியராகமம் /LEVITICUS 9:1-24 |

# ஆராதனை தியானப் பொருள்

## அக்டோபர் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு Oct-6 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 1 சாமுவேல் 25:14-28<br>1 தெசலோனிக்கேயர் 4:1-12<br>லூக்கா 10:25-37<br>சங்கீதம் 23 | இறைமக்களின் திருப்பணி<br>MINISTRY OF THE LAITY |
| ஞாயிறு Oct-13 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திரயாகமம் 4:10-17<br>அப்போஸ்தலர் 3:1-10<br>மத்தேயு 17:14-21<br>சங்கீதம் 103:1-33 | FIRST FRUIT OFFERING SUNDAY மாற்றுத்திறனாளியின் மாண்பும் சார்புநிலையும்<br>DIFFERRENTLY ABLED:DIGNITY AND DEPENDENCE |
| ஞாயிறு Oct-20 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 39:1-23<br>எபிரேயர் 12:1-11<br>மத்தேயு 6:24-34<br>சங்கீதம் 17 | பொருளுள்ள வாழ்வு தேடலில் இளையோர்<br>YOUTH IN SEARCH OF MEANINGFUL LIFE |
| ஞாயிறு Oct-27 2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | உபாகமம் 26:4-11<br>அப்போஸ்தலர் 2:43-47<br>மத்தேயு 13:33-35<br>சங்கீதம் 109:21-31 | சீர்திருத்தப்பட்ட, சீர்திருந்தும் திருச்சபை<br>CHURCH:REFORMED AND REFORMING |

